**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா,பி.ஏ.,பி.எல்.,(Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 03 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.591/2024**

CNR.No.TNKR03-001452-2022

1. சின்னபிள்ளை
2. பேச்சியம்மாள் ...வாதிகள்

**//எதிர்//**

1. அங்கம்மாள்
2. வசந்தாமணி
3. வேம்பாயி
4. ரெங்கசாமி

...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 10.06.2026-ம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 4 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு N. சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், 4 வது பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 4 வது பிரதிவாதியை தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதிகள் தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

வாதிகள் தரப்பில் பாகப்பிரிவினைக்கான இந்த தாவாவில், வாதிகளுக்கு தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 6 சமபாகங்களாக பாகப்பிரிவினை செய்து அதில் 2 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் வேண்டியும், 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில்

4 வது பிரதிவாதி பெயரில் உருவாக்கப்பட்ட கிரைய பத்திரங்கள் வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லாது என்றும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை உள்ளிட்ட பரிகாரங்கள் கோரி இந்த தாவா.

<u>2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கும் பின்வருமாறு.</u>

2.1) தாவா 1 வது அயிட்ட சொத்தானது ஆதியில் கந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். கடந்த 28.05.1971 ம் தேதியன்று வாதியின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் மேற்படி கந்தசாமி மற்றும் அவரது மகன்களிடம் இருந்து உரிய மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்தானது கடந்த 14.06.1977 ம் தேதியன்று வாதியின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் மேற்படி ஆறுமுக ஆசாரிடம் இருந்து உரிய மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றும், அதன்பின்னிட்டு, தாவா சொத்தில் ஓட்டுவீடு கட்டி, தாவா சொத்துக்களை முழு உரிமையுடனும், தனித்த சுவாதீனத்திலும் குடும்பத்துடன் அனுபவித்து வந்த நிலையில், வாதியின் தந்தை கடந்த 15.11.1996 ம் தேதி இறந்துவிட்டார்.

2.2)வாதியின் தந்தை தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். வாதிகளின் தந்தை இறப்பிற்கு பிறகு வாதிகளின் தாயாரும், வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினையும் செய்து கொள்ளாமல் நாளது தேதி வரை கூட்டாக அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களில் வாதிகளின் தாயார் அவர்களுக்கு 1/6 பாகமும், வாதிகளாகிய இருவருக்கும் தலா 1/6 பாகமும், 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு தலா 1/6 பாகமும் உள்ளது. இந்நிலையில் வாதிகளின் தாயார் கடந்த 17.11.2023 ம் தேதி இறந்துவிட்டார்.

2.3) கடந்த 2024 ம் வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வாதிகள் தாவா சொத்துக்களின் வருவாய் ஆவணங்களை பார்த்த போது, வழக்கின் 3 வது பிரதிவாதியான வேம்பாயி அவர்களும், வாதிகளின் தாயார் ராமாயி அவர்களும் தாவா சொத்துக்களை பொறுத்து 4 வது பிரதிவாதி பெயரில் கடந்த 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் கிரைய ஆவணங்களை உருவாக்கிய விவரம்

தெரியவந்த நிலையில், வாதிகள் தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 6 சமபாகங்களாக பாகப்பிரிவினை செய்து அதில் 2 பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரியும், 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் 4 வது பிரதிவாதி பெயரில் உருவாக்கப்பட்ட கிரைய பத்திரங்கள் வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லாது என்றும், மற்றும் வழக்கின் செலவுத்தொகை உள்ளிட்ட பரிகாரங்கள் கோரி இந்த தாவா.

3) 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 4 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு N. சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், 4 வது பிரதிவாதியை தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டது. கடந்த 20.08.2025 அன்று வாதிகள் சார்பில் 1 வது வாதி முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. வாதிகள் தரப்பில் வேறு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. இத்தோடு வாதிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

4)தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதிகளின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>5) பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

5.1) இவ்வழக்கானது தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், 4 வது பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. தாவா 1 வது அயிட்ட சொத்தானது ஆதியில் கந்தசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது வாதிகளின் வழக்காகும். கடந்த 28.05.1971 ம் தேதியன்று வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் மேற்படி கந்தசாமி மற்றும் அவரது மகன்களிடம் இருந்து உரிய

மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளார் என்று அறிய முடிகிறது. மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா 2 வது அயிட்ட சொத்தானது கடந்த 14.06.1977 ம் தேதியன்று வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை தந்தை ராமன் (எ) வெள்ளையன் மேற்படி ஆறுமுக ஆசாரிடம் இருந்து உரிய மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளார் என்று அறிய முடிகிறது. மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், அதன்பின்னிட்டு, தாவா சொத்தில் ஓட்டுவீடு கட்டி, தாவா சொத்துக்களை முழு உரிமையுடனும், தனித்த சுவாதீனத்திலும் குடும்பத்துடன் அனுபவித்து வந்த நிலையில், வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை கடந்த 15.11.1996 ம் தேதி இறந்துவிட்டார் என்று அறிய முடிகிறது.

5.2)வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்பதால் வாதிகளின் தாயாரும், வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை எவ்வித பாகப்பிரிவினையும் செய்து கொள்ளாமல் நாளது தேதி வரை கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்பது வாதிகளின் வழக்காகும். தாவா சொத்துக்களில் வாதிகளின் தாயார் அவர்களுக்கு 1/6 பாகமும், வாதிகளாகிய இருவருக்கும் தலா 1/6 பாகமும், 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு தலா 1/6 பாகமும் உள்ளது. வழக்கின் 3 வது பிரதிவாதியான வேம்பாயி அவர்களும், வாதிகளின் தாயார் ராமாயி அவர்களும் தாவா சொத்துக்களை பொறுத்து 4 வது பிரதிவாதி பெயரில் கடந்த 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் கிரைய ஆவணங்களை உருவாக்கியுள்ளனர். கடந்த 20.01.2022 ம் தேதியன்று வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் என்பவரின் இறப்பு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 05.02.2022 ம் தேதியன்று வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் வாரிசு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 08.12.2023 ம் தேதியன்று வாதிகளின் தாயார் ராமாயி அவர்களின் இறப்பு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.3) கடந்த 02.11.2021 ம் தேதியன்று வாதிகளின் தாயார் ராமாயி, 4 வது பிரதிவாதி ரெங்கசாமி பெயரில் எழுதி வைத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 11.04.2022 ம் தேதியன்று 3 வது பிரதிவாதியும், ராமாயி என்பவரும் 4 வது பிரதிவாதி ரெங்கசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 02.11.2023 ம் தேதியன்று வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 02.11.2023 ம் தேதியன்று வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.9 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

6) வாதிகள் பிரதிவாதிகளுக்கிடையே உள்ள உறவு முறையை மறுத்தலிக்கும் விதமாகவும், தாவா சொத்தில் வாதிக்களுக்குரிய பாகத்தை மறுத்தலிக்கும் விதமாகவும், பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணமோ சாட்சியமோ தாக்கல் செய்யப்படவில்லை. வாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவண சாட்சிகளின் அடிப்படையில் வாதிகளுக்கு தாவா சொத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதுபோல் 2/6 பங்கு உள்ளது என்று அறிய முடிகிறது. எனவே வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமும், பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7) முடிவாக, வாதிகளின் தாவாவை அனுமதித்து தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 2/6 பாகம் கூட்டாக உள்ளது என்று விளம்புகை செய்து, அதை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கியும், 02.11.2021 மற்றும் 11.04.2022 ஆகிய தேதிகளில் 4 வது பிரதிவாதி பெயரில் உருவாக்கப்பட்ட கிரைய பத்திரங்கள் வாதிகளின் பாகத்தை பொறுத்து செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இரு தரப்பினரும் ஆஜராக வாய்தா 17.07.2026.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 17.06.2026–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**

**வாதி தரப்பு சாட்சியங்கள்**

| | |
|---|---|
| வா.சா.1 | சின்னப்பிள்ளை |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 28.05.1971 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.06.1997 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 20.01.2022 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் என்பவரின் இறப்பு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் |
| வா.சா.ஆ.4 | 05.02.2022 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் வாரிசு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் |
| வா.சா.ஆ.5 | 08.12.2023– வாதிகளின் தாயார் ராமாயி அவர்களின் இறப்பு சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் |
| வா.சா.ஆ.6 | 02.11.2021 – வாதிகளின் தாயார் ராமாயி, 4 வது பிரதிவாதி ரெங்கசாமி பெயரில் எழுதி வைத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 11.04.2022 – 3 வது பிரதிவாதியும், ராமாயி என்பவரும் 4 வது பிரதிவாதி ரெங்கசாமிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 02.11.2023 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட சொத்து வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.9 | 02.11.2023 – வாதிகளின் தந்தை ராமன் (எ) வெள்ளையன் பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீது அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**